வாக்குமூலம்

முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர்.

| | | |
|---|---|---|
| அசல் மனு எண் | : | OS No.33/2014 |
| வழக்கு சாட்சி | : | PW 1 |
| நாள் | : | 21.06.2023 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீதரண் | ஜாதி | : | |
| தந்தை/கணவர் பெயர் | : | ரங்கையன் நாயுடு | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

<u>முதல் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

திருவள்ளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 102/2016ல் எல்லா பிரதிவாதிகளும் தோன்றா தரப்பினர் நான் எதிர்த்து நடத்தி வருகிறேன் என்றால் ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு நானும் இந்த வழக்கு முதல் பிரதிவாதியை தவிர்த்து இந்த வழக்கின் மற்ற பிரதிவாதிகள் சேர்ந்து வேறு சொத்து வாங்கியிருக்கிறேன் என்றால் ஆமாம். அந்த சொத்து தனிப்பட்ட சொத்தாக தான் விசாரிக்கவேண்டும். பட்டா ரத்து செய்ய ஆர்டிஒவை தான் கோரிய போது அவர் சிவில் நீதிமன்றத்தை அனுக வேண்டும் என்று சொல்லிருக்கவேண்டும் என்பதும் என் வலியுருத்தல் பட்டாவை ரத்து செய்தார் என்றால் சரியல்ல. நான்கு பேருதான் செய்தோம். அதனால் தான் முதல் பிரதிவாதி நிறைய வழக்குகள் போடவேண்டிருந்தது என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் 1ல் பத்தாம் பக்கம் இல்லை என்றால் ஆமாம். அது எடுக்கப்பட்டு குறுக்கு விசாரணையில் என் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த 10வது பக்கத்தோடு உள்ள ஆவணம் என்னிடம் உள்ளது. இப்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் மொத்தமாக 10ம் பக்கத்தோடு உள்ளது அது பிவாதசாஆ 4 ஆகும். பிவாதசாஆ 1 ஆவணத்தில் சான்றிட்ட நகல் பெறும்போது 10ம் பக்கம் இல்லாமல் வழங்கியுள்ளார்கள் என்பதால் பிவாதசாஆ 4 குறியிடப்படுகிறது. 10ம் பக்கத்தில்

சர்வே எண் என்ற இடத்தில் எதுவும் குறிப்பிடாமல் காலியாக உள்ளது. 8ம் பக்கத்திலும் அது காலியாக உள்ளது. 18.04.1994 என்று எல்லாப்பக்கத்திலும் உள்ளது. 10ம் பக்கத்தில் மட்டும் 18.04.1997 என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

Sd/- Tmt. G. Subathira Devi, M.L.,
I Additional District and Sessions Judge,
Tiruvallur. (FAC)